**முதன்மை சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்**

**01.09.2026**

OS. No. 83/2015

பக்கம் –

PW2 – வெங்கடபதி

**பிரதிவாதியின் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் கையொப்பம் போட்டதாக சொன்னது எப்போது என்றால் 1973ஆம் ஆண்டு போட்டேன். வாதியின் அம்மா ஆண்டாள் எனது அக்கா என்றால் சரிதான். எனது சகோதரிக்கு உயில் எழுதப்பட்ட விவரம் 1973 ஆம் ஆண்டே தெரியுமா என்றால் தெரியும். அதன் பின்பு எனது சகோதரி ஆண்டாள் ஒரு அடமான பத்திரம் செய்தார் என்றும் அதில் நான் சாட்சி கையொப்பம் போட்டுள்ளேனா என்றால் இல்லை. 2012 ஆம் ஆண்டு எனது சகோதரி ஆண்டாள் வாதிகளுக்கு ஒரு செட்டில் மெண்ட் ஆவணம் எழுதி வைத்தார் என்றால் சரிதான். அந்த செட்டில்மெண்ட் ஆவணத்தில் நான் சாட்சி கையொப்பம் போட்டுள்ளேனா என்றால் இல்லை. என்னிடம் தற்போது காட்டப்படும் EX.A3 ஆவணத்தில் உள்ள முதல் சாட்சி கையொப்பம் என்னுடையது என்றால் சரிதான். EX.A3 ஆவணம் குறித்து எனக்கு தெரியும் என்றால் சரிதான். EX.A3 செட்டில்மெண்ட் ஆவணத்தில் 1973ஆம் ஆண்டு உயில் பற்றி எதுவும் குறிப்பு இல்லை என்றால் சரிதான். 2011 ஆம் ஆண்டுவரை எனது சகோதரி ஆண்டாள் பெயரில் தாவா சொத்து குறித்து எந்த ஆவணமும் இல்லை என்றால் சரிதான். அதன் பின்னர்தான் அடமான ஆவணம் எனது சகோதரி ஆண்டாளால் ஏற்படுத்தப்பட்டது என்றால் சரிதான். 1973 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட உயிலை யார் எழுதினார்கள் என்றால் குமரேசன் என்பவல் எழுதினார். தனபாலுக்கும் எனக்கும் என்ன உறவு என்றால் கண்ணையனின் நண்பர் தனபால் ஆவார். கண்ணையனுக்கு இரண்டு மனைவிகள் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி கண்ணையனின் முதல் மனைவியின் மகன் என்றால் சரிதான். வாதிகள் கண்ணையனின் இரண்டாம் மனைவியின் பிள்ளைகள் என்றால் சரிதான். தாவா சொத்தில் முதல் மனைவியின் குழந்தைகள் மற்றும் இரண்டாவது மனைவியின் குழந்தைகள் தனிதனி போஷனாக வசித்து வந்தார்களா என்றால் இல்லை ஒரே வீட்டில் ஒன்றாகதான் வசித்து வந்தார்கள். தற்போது வாதிகளும், 1ம் பிரதிவாதியும் தாவா சொத்தில் தனித்தனியாக வசித்து வருகிறார்கள் என்றால் இல்லை. பிரதிவாதிகள் தனியாக வேறு இடத்தில் வசித்து வருகிறார்கள். நான் எனது சகோதரி ஆண்டாளுக்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 1973 ஆம் ஆண்டு எழுதப்பட்ட உயில் இல்லை என்றும் தற்போது புதிய தாளில் எழுதப்பட்ட உயில்தான் உள்ளது

என்றும் தற்போது நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அவ்வாறு உண்மையில் 1973ஆம் ஆண்டு இந்த உயில் ஏற்படுத்தப்பட்டிருந்தார் ஆண்டாள் அம்மாள் ஏற்படுத்தியிருந்த அனைத்து ஆவணங்களிலும் இந்த உயில் குறித்து சொல்லப்பட்டிருக்கும் என்றும் அவ்வாறு இல்லாததால்தான் உயில் குறித்து சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. ஆண்டாள் அம்மாள் தாவா சொத்து இரண்டு முறை இரண்டு வழக்குகள் தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். அந்த இரண்டு வழக்குகளிலும் ஆண்டாள் அம்மாள் உயில் குறித்து சொல்லவில்லை என்றும் எனவே சொல்லப்பட்டுள்ள இந்த உயில் மோசடியாக தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. நான் வாதிகளின் தாய்மாமன் என்பதால் வாதிகளுக்கு ஆதரவாக மோசடி ஆவணங்களை உருவாகக்கிகொண்டு நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/– J.மோகனா,
முதன்மை சார்பு நீதிபதி,
காஞ்சிபுரம்.